பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:35 | 20.12.2023 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# அடை மழையால் முல்லைத்தீவில் 6260 பேர் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்யும் அடைமழையால் 2105 குடும்பங்களைச் சேர்ந்த 6260 பேர் பாதிக்கப்பட்டனர் 412 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கி உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளியிடப்பட்ட தகவல் அடிப்படையில் நேற்று (19) மாலை 4 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 333 குடும்பங்களை சேர்ந்த 1076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு, வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு ஆகியன மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர்கள் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார ஊழியர்கள், இராணுவத்தினர், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு, அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.



## ஜனாதிபதி பதவிக்கு டொனால்ட் ட்ரம்ப் தகுதியற்றவர்

அரசியலமைப்பின் கிளர்ச்சி விதியின் கீழ் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு டொனால்ட் ட்ரம்ப், தகுதியற்றவர் என்று கொலராடோ உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ட்ரம்ப் தயாராகி வரும் நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு அமெரிக்கத் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து முடிவை மாற்றும் முயற்சியில் அமெரிக்க கேபிடல் கட்டடத்தில் கலவரத்தைத் தூண்டியதாக ட்ரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அமெரிக்காவில் முதல் தடவையாக ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய உள்ளதாக ட்ரம்ப் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் 20,000க்கும் அதிகமானோர் பாதிப்பு

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையினால் 13 மாவட்டங்களில் புயல், காற்று, நிலச்சரிவு, திடீர் வெள்ளம் ஆகியவை பதிவாகியுள்ளன. நேற்று நண்பகல் நிலவரப்படி சுமார் 61 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், 3,200 குடும்பங்களைச் சேர்ந்த 20,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. 849 குடும்பங்களைச் சேர்ந்த 2,796 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் சீரற்ற காலநிலை தொடர்பான பாதிப்புகள் அதிகளவில் உள்ளன. மாகம, அந்த ரகஸ்யாய, தெள்ளுல்ல, கொன்வெலன ஆகிய தாழ் நிலப்பகுதிகள் ஏற்கெனவே நீரில் மூழ்கியுள்ளதாக திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் தெரிவித்தார். திங்கட்கிழமை பெய்த கடும் மழையினால் மாவட்டத் தில் சூரியவெவ, ரம்முதுவெவ, மீகஹஜதுர மற்றும் ஹபரத்தவெல ஆகிய பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடற்படையினர் வெள்ள நிவாரண குழுக்களை களமிறக்கியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. சேவை குழுக்கள் தற்போது பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மிகவும் தேவையான உதவிகளை வழங்குகின்றன. அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடும் மக்களுக்கு முக்கியமான போக்குவரத்தை வழங்கவும் அவர்கள் டிங்கிகளைப் பயன்படுத்துகின்றனர்.

# கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடவுள்ள ரணில்

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்ற வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடவுள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் விக்கிரமசிங்கவை முன்வைப்பது அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அவசர தேவை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பற்ற அரசியல் ஜனாதிபதியாக செயற்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளின் கூட்டிணைவாக இதனை செய்து வருகிறார். பலர் போட்டியிட விரும்புகிறார்கள். ஆனால், இக்கட்டான காலங்களில் ஒரு நாட்டை சரியாக நடத்துவதற்கு இத்தகைய குணங்கள் கொண்டவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள்களின் விலை அதிகரிப்பு

ஜனவரி முதலாம் திகதி முதல் இந்நாட்டில் விற்பனை செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் விலை குறைந்தது ஒரு இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கப் போகிறது.

இதுவரை வாகனங்களுக்கு அறவிடப்படாத VAT புதிய திருத்தத்தின் மூலம் மோட்டார் சைக்கிள்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம்.

மோட்டார் சைக்கிள் ஒன்றின் விலை 18% ஆக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் மிகவும் பிரபலமான மோட்டார் சைக்கிளான CT100 ரக மோட்டார் சைக்கிளின் விலை சுமார் ஏழு லட்சம் ரூபாவாகும் என விநியோகஸ்தர்கள் கூறுகின்றனர்.

# இரணைமடு வான் கதவுகள் திறப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது பெய்து வரும் தொடர் மழை காரணமாக இரணைமடு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் நீரினை வெளியேற்றும் வகையில் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. அனர்த்த நிலைமைகளை தடுக்கும் வகையில் ஏதுவான நிலையினை ஆராயும் நோக்கோடு இரணைமடுவிற்கு விஜயம் செய்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளை பார்வையிட்டதோடு நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீட்டுத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு புதிய வீட்டுத்திட்டத்துடன் காணி வழங்க ஆராயவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலை மற்றும் கண்டாவளை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை சந்தித்த பின் தெரிவித்தார்.

இதன்போது மக்களின் வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியில் உள்ள மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய வீட்டுத்திட்டத்துடன் பாதுகாப்பான இடத்தில் காணி வழங்க மக்களின் விருப்பத்தை கேட்டறிந்தார்.

அனர்த்த பாதுகாப்புக்காக தஞ்சம் அடைந்த மக்களிற்கு சமைத்த உணவு பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் வழங்கப்பட்டு வருவதுடன் சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களும் முறையாக இடம்பெறுகின்றன.




“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# தரமற்ற பொருட்களால் மாணவரின் உடல் நிலை பாதிப்பு

தரமற்ற இறக்குமதி செய்யப்பட்ட பாடசாலைப் பொருட்கள், எழுதுபொருட்கள் பாவனையால் சிறுவர்களுக்கு ஏற்படும் உடல்நலக் கேடுகள் தொடர்பில் பாரிய கவலை எழுந்துள்ளது என லேடி ரிட்ஜ்வே சிறார்களுக்கான வைத்தியசாலையின் தர முகாமைத்துவ பிரிவின் தலைவர் டொக்டர் மஹிந்த விக்கிரமாராச்சி தெரிவித்துள்ளார்.

சர்வதேச பாதுகாப்புத் தரங்களுக்கு இணங்காத பென்சில்கள், வண்ணமயமான பென்சில்களில் தீங்கு விளைவிக்கும் கனரக உலோகங்களின் சாத்தியமான இருப்பு போன்றவற்றால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

தரமற்ற இறக்குமதி செய்யப்பட்ட பென்சில்கள் அவற்றின் மேற்பரப்பில் பூசப்பட்ட நிறங்களில் கனரக உலோகங்கள் என்பன மாணவர்களின் அன்றாடம் பயன்படுத்தும் கருவிகளின் பாதுகாப்பு எச்சரிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற பென்சில்கள், வண்ணப் பென்சில்கள், பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்கள், மதிய உணவுப் பெட்டிகள் குறித்து பெற்றோரின் முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இந்தக் கண்டுபிடிப்புகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

தரமற்ற பிளாஸ்ரிக் பொருட்களால் ஏற்படக்கூடிய சுகாதார அபாயங்களை டாக்டர் விக்கிரமாராச்சி வலியுறுத்துவதால், பிரச்சினை வெறும் அழகியலுக்கு அப்பால் நீண்டுள்ளது. பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக்குகளின் தரம் குறித்து கவனத்தை ஈர்த்து, தண்ணீர்ப்போத்தல்கள் மற்றும் மதிய உணவுப் பெட்டிகளுக்கு தரம் 5 பிளாஸ்ரிக்குகளை மட்டுமே பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டுகிறார், ஏனெனில் Bisphenol A (BPA) கொண்ட பிளாஸ்ரிக்குகள் புற்றுநோயை உண்டாக்கும் மற்றும் பல்வேறு நோய்களுக்கு வழிவகுக்கும்.

இந்த விவகாரம் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. 2022 ஆம் ஆண்டில், நேபாளத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு மையம் (CEPHED) வெளியிட்ட ஆய்வில், Wonjin Institute for Occupational and Environmental Health (WIOEH) மற்றும் Financial Industries Public Interest Foundation (FIPIF), தென் கொரியா ஆகியவற்றின் ஆதரவுடன் வெளியிடப்பட்டது. 38 சதவீதம் (53 இல் 20) ஆசியா முழுவதும் பயன்படுத்தப்படும் அழிப்பிகள் போன்ற அத்தியாவசிய எழுதுபொருட்கள் பிளாஸ்ரிக் மற்றும் 94 சதவீதம் (31 இல் 29) வெப்ப காகிதத்தில் பொது சுகாதார மற்றும் சுற்றுச்சூழலுக்கு நச்சுத்தன்மையுள்ள எண்டோகிரைன் சீர்குலைக்கும் இரசாயனம் (EDCS) போன்ற BPA உள்ளது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர், மேலும் கலாநிதி விக்கிரமாராச்சி அவர்கள் விழிப்புடன் இருக்கும் நுகர்வோர்களாக இருக்குமாறு வலியுறுத்துகிறார். பள்ளிப் பொருட்களை வாங்குவதில் செலவைவிட தரத்தை தேர்வு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் வெறும் வசதிக்கான விடயம் மட்டுமல்ல, நமது இளைய தலைமுறையின் நல்வாழ்வைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய படியாகும்.

எவ்வாறாயினும், வசதி படைத்தவர்களுக்கும் மிகவும் எளிமையான வழிகளைக் கொண்டவர்களுக்கும் இடையில் பள்ளி விநியோகத்திற்கான விருப்பங்களில் உள்ள வேறுபாடு பரந்த சமூகப் பொருளாதார நிலப்பரப்பில் வெளிச்சம் போடுகிறது, அங்கு தரமான கல்விக்கான அணுகல் பெரும்பாலும் நிதித்திறனால் பாதிக்கப்படுகிறது. தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையால், பெற்றோர்கள் வேறு வழியின்றி மலிவு விலையில் மாற்று வழிகளைத் தேடுகின்றனர். பொருளாதார வீழ்ச்சிக்கு முன்பே, பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு குறிப்பாக குறைவான வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு எழுதுபொருள் வாங்கும் போது சிரமங்களை எதிர்கொண்டனர். பொருளாதார நெருக்கடியால், தங்கள் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதில் அவர்கள் எவ்வளவு சுமையாக உள்ளனர் என்பது தெளிவாகிறது.

நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே, நாட்டிற்கு குறிப்பாக சீனா போன்ற நாடுகளில் இருந்து வரும் தரமற்ற பள்ளி உபகரணங்களின் இலாபம் உந்துதல் குறித்து கவனத்தை ஈர்க்கிறார். இது சம்பந்தமாக இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடம் (SLSI) தரநிலைகள் இல்லாததால், தரமற்ற தயாரிப்புகள் சந்தையில் வெள்ளம் வர அனுமதிக்கும் ஒழுங்குமுறை இடைவெளிகள் குறித்து கேள்விகளை எழுப்புகிறது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், SLSI தனது கடமையை நிறைவேற்றி தரமற்ற உபகரணங்களை விசாரிக்க வேண்டியதன் அவசியத்தை சரியாக வலியுறுத்துகிறார். ஆசிரியர்களும் பெற்றோர்களும் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்களின் நல்வாழ்வுக்காக வாதிட வேண்டும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு சுவிஸ் அருள்மிகு சூரிச்சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தினுடைய நிதி பங்களிப்போடு அன்பே சிவம் அறக்கட்டளையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிவாரண பணிகளின் தொடர்ச்சியாக உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டது முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான், முத்துவிநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. கிராம அலுவலர் அபிவிருத்தி உத்தியோகத்தர், அன்பே சிவம் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மக்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கப்பட்டது.



## முல்லைத்தீவில் கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகிலே கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி அமரசிங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று (19) தேடுதல் நடத்திய பொலிஸாரும் விஷேட 914 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த 34 வயதுடைய ஒருவரை கைது செய்தனர். அவருக்கு கேரளா கஞ்சா விநியோகித்த முள்ளியவளை புதரிகுடா பகுதியைச் சேர்ந்த கணவனையும், மனைவியையும் 214 கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர். இவர்களுக்கான பிரதான விநியோகஸ்தர்களை தேடும் பணிகளோடு குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற முல்லைத்தீவு பொலிஸார் இன்றைய தினம் (20) குறித்த நபர்களை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

2023 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சுமார் 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் வெளிநாடு செல்வதற்கு தேவையான அடிப்படை தகமைகளை பூர்த்தி செய்த சுமார் 5000 மருத்துவர்கள் நாட்டில் உள்ளனர் எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமல் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

## மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்றைய தினம் (19) மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 02.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன் போது, மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விரிவாக ஆராயப்பட்டன. மேலும் பாடசாலை மாணவர்களின் வரவு ஒழுங்கின்மை மற்றும் இடைவிலகல், மாணவர்களின் மீளிணைப்பு செயற்பாடுகள், சுகாதாரம் மற்றும் உணவு, பிறப்புச் சான்றிதழ் தொடர்பான நடவடிக்கைகள், சிறுவர் கழக செயற்பாடுகள், கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு செயற்பாடுகள், தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.சி.குணபாலன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.க.ஜெயபவானி, பிரதேச செயலாளர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, சட்ட வைத்திய அதிகாரி, உதவிப் பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், முன்பிள்ளை பருவ உத்தியோகத்தர்கள், உளநலவளத் துறை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மின்சார சபை ஊழியர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் இல்லை


இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு இந்த வருடத்திற்கான போனஸ் அல்லது ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இது குறித்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் 25% சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் மின்சார சபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு ஊக்கத் தொகைகள், கொடுப்பனவுகள் மற்றும் அதிகாரிகள் வாடகைக்கு எடுத்த வாகனங்கள் மற்றும் வாடகையாக செலுத்தப்பட்ட பணம் குறித்த அறிக்கையை வழங்குமாறும் மின்சார சபைத் தலைவரிடம் அமைச்சர் கோரியுள்ளார்.

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு

படம் - சண்முகம் தவசீலன்

















# ஐ.பி.எல் அணிகள் ஏலத்தில் வாங்கிய வீரர்கள் பட்டியல்

2024 ஐ.பி.எல் மினி ஏலம் துபாயில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் பத்து ஐ.பி.எல் அணிகளும் வீரர்களை போட்டி போட்டு வாங்கினர். அதிகபட்சமாக மிட்செல் ஸ்டார்க் 24.75 கோடி வரை விலை பெற்று ஐ.பி.எல் வரலாற்றில் மாபெரும் சாதனை புரிந்தார். இந்த ஏலத்தில் மொத்தமாக பத்து அணிகளும் சேர்ந்து அதிகபட்சமாக 30 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 77 வீரர்கள் வாங்கப்பட்டன. ஆனாலும் அத்தனை இடங்களையும் அணிகள் நிரப்பவில்லை.

10 அணிகளும் 72 வீரர்களை மட்டுமே வாங்கி உள்ளன. அதில் 30 வெளிநாட்டு வீரர்களின் இடங்கள் மட்டும் முழுமையாக நிரப்பப்பட்டன. ஏலத்திற்கு பின் 8 அணிகளில் தலா 25 வீரர்கள் உள்ளனர். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் 23 வீரர்களும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு 22 வீரர்களும் மட்டுமே உள்ளனர்.




**சென்னை சூப்பர் கிங்ஸ்**

அஜய் மண்டல், அஜிங்க்யா ரஹானே, தீபக் சாஹர், டெவோன் கான்வே, மகேஷ் தீக்ஷனா, மதீஷ பதிரானா, மிட்செல் சான்ட்னர், மொயின் அலி, எம்.எஸ்.டோனி, முகேஷ் சவுத்ரி, நிஷாந்த் சிந்து, பிரசாந்த் சோலங்கி, ராஜ்வர்தன் ஹங்கர்கேகர், ரவீந்திர ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட், ஷேக் ரஷீத் சிவம் துபே, சிமர்ஜீத் சிங், துஷார் தேஷ்பாண்டே, ரச்சின் ரவீந்திரா (1.80 கோடி), ஷர்துல் தாக்கூர் (ஏலம் - 4கோடி), டேரில் மிட்செல் ( 14.00 கோடி), சமீர் ரிஸ்வி ( 8.40 கோடி), முஸ்தாபி சுர் ரஹ்மான் ( 2 கோடி), அவனிஷ் ராவ் ஆரவெல்லி ( 20 லட்சம்).

**டெல்லி கேப்பிடல்ஸ்**

அபிஷேக் போரல், அன்ரிச் நார்ட்ஜே, அக்சர் படேல், டேவிட் வார்னர், இஷாந்த் சர்மா, குல்தீப் யாதவ், லலித் யாதவ், லுங்கிசானி என்கிடி, மிட் செல் மார்ஷ், முகேஷ் குமார், பிரவின் துபே, பிருத்வி ஷா, ரிஷப் பந்த் சையத், கலீல் அகமது, விக்கி ஒஸ்ட்வால், யாஷ் துள், ஹாரி புரூக் (ஏலம் - 4 கோடி), டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (ஏலம்- 50 லட்சம்), ரிக்கி புய் (20 லட்சம்), குமார் குஷாக்ரா (7.20 கோடி), ரசிக் தர் (20 லட்சம்), ஜேரிச்சர்ட்சன் (5 கோடி), சுமித் குமார் (1 கோடி), ஷாய் ஹோப் (ஏலம் - 75 லட்சம்), ஸ்வஸ்திக் சிகாரா ( 20 லட்சம்).

**குஜராத் டைட்டன்ஸ்**

அபினவ் மனோகர், சாய் சுதர்சன், நல் கண்டே, டேவிட் மில்லர், ஜெயந்த் யாதவ், ஜோசு வா லிட்டில், கேன் வில்லியம்சன், மேத்யூ வேட், முகமது ஷமி, மோஹித் ஷர்மா நூர் அகமது, ஆர் சாய் கிஷோர் ராகுல் தெவாடியா ரஷித் கான், சுப்மன் கில், விஜய் சங்கர் விருத்திமான் சாஹா அஸ்மத்துல்லா ஓமர்சாய் (50 லட்சம்), உமேஷ் யாதவ் (5.80 கோடி), ஷாருக்கான் (7.40 கோடி), சுஷாந்த் மிஸ்ரா ( 2.20 கோடி), கார்த்திக் தியாகி (60 லட்சம்), மானவ் சுதர் (20 லட்சம்), ஸ்பென்சர் ஜான்சன், (10 கோடி) ராபின் மின்ஸ் (3.60 கோடி)

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**

நிதிஷ் ராணா, ரிங்கு சிங், ரஹ்மானுல்லா குர்பாஸ், ஷ்ரேயாஸ் ஐயர், ஜேசன் ராய்மூ, சுனில் நரைன், சுயாஷ் சர்மா, அனுகுல் ராய் ஆண்ட்ரே ரஸ்ஸல், வெங்கடேச ஐயர், ஹர்ஷித் ராணா, வைபவ் அரோரா, வருண் சக்கரவர்த்தி , கே.எஸ்.பாரத் (50 லட்சம்), சேத்தன் சகாரியா (ஏலம் - 50 லட்சம்), மிட்செல் ஸ்டார்க் (ஏலம் 24.75 கோடி), அங்கிரிஷ் ரகுவன்ஷி ( 20 லட்சம்), ரமன்தீப் சிங் (ஏலம் - 20 லட்சம்), ஷெர்பேன் ரூதர்ஃபோர்ட், (ஏலம் - 1.50 கோடி), மணீஷ் பாண்டே (50 லட்சம்), முஜீப் உர் ரஹ்மான் (2 கோடி), கஸ் அட்கின்சன் (1 கோடி), சாகிப் உசேன் (2 லட்சம்)

**லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ்** -கே.எல்.ராகுல், குயின்டன் டி காக், நிக்கோலஸ் பூரன், ஆயுஷ் படோனி, கைல் மேயர்ஸ், மார்கஸ் ஸ்டோனிஸ், தீபக் ஹூடா, ரவி பிஷ்னோய், நவீன் உல் ஹக், கிருணால் பாண்டியா, யுத்வீர் சிங், பிரேரக் மன்கட், யாஷ் தாக்கூர், அமித் மிஸ்ரா, மார்க் வூட், மயங்க் யாதவ், மொஹ்சின் கான், கே.கௌதம், தேவ்தத் படிக்கல், சிவம் மாவி ( 6.40 கோடி), அர்ஷின் குல்கர்னி (20 லட்சம்), எம் சித்தார்த் ( 2.40 கோடி), ஆஷ்டன் டர்னர், (1 கோடி), டேவிட் வில்லி (2 கோடி), முகமது அர்ஷத் கான் ( 20 லட்சம்)

**மும்பை இந்தியன்ஸ்**

ரோஹித் சர்மா, டெவால்ட் ப்ரீவிஸ், சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷன், திலக் வர்மா, டிம் டேவிட், விஷ்ணு வினோத், அர்ஜூன் டெண்டுல்கர், ஷம்ஸ் முலானி, நேஹால் வதேரா, ஜஸ்பிரித் பும்ரா, குமார் கார்த்திகேயா, பியூஷ் சாவ்லா, ஆகாஷ் மத்வால், ஜேசன் பெஹ்ரன்டோர்ஃப், ஹர்திக் பாண்டியா, ரொமாரியோ ஷெப்பர்ட், ஜெரால்ட் கோட்ஸி (5 கோடி), தில்ஷன் மதுஷங்க (4.6 கோடி), ஷ்ரேயாஸ் கோபால் (20 லட்சம்), நுவான் துஷாரா ( 4.80 கோடி), நமன் திர் (20 லட்சம்) அன்ஷூல் கம்போஜ் (20 லட்சம்), முகமது நபி (20 லட்சம்), ஷிவாலிக் சர்மா ( 20 லட்சம்)

**பஞ்சாப் கிங்ஸ்**

ஷிகர் தவண், லியாம் லிவிங்ஸ்டோன், ஜானி பேர்ஸ்டோ, ஜிதேஷ் சர்மா, சிவம் சிங், ராகுல் சாஹர், பிரப்சிம்ரன் சிங், அர்ஷ்தீப் சிங், ஹர்பிரீத் பாட்டியா, ஹர்ப்ரீத் ப்ரார், அதர்வ தைடே, வித்வத் கவேரப்பா, ரிஷி தவான் ககிசோ ரபாடா, சாம் கர்ரன், நாதன் எல்லிஸ், சிக்கந்தர் ராசா, ஹர்ஷல் படேல் (11.75 கோடி), கிறிஸ் வோக்ஸ் (4.20 கோடி), அசுதோஷ் சர்மா (20 லட்சம்), விஸ்வநாத் பிரதாப் சிங் (20 லட்சம்), ஷஷாங்க் சிங் (20 லட்சம்), தனய் தியாகராஜன் (ஏலம் 20 லட்சம்), பிரின்ஸ் சவுத்ரி (20 லட்சம்), ரிலீ ரோசோவ் (8.00 கோடி).

**ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்**

ஃபாஃப் டு பிளெசிஸ், கிளென் மேக்ஸ்வெல், விராட் கோலி, ரஜத் படிதார், அனுஜ் ராவத், தினேஷ் கார்த்திக், சுயாஷ் பிரபுதேசாய், வில் ஜாக்ஸ், மஹிபால் லோமரோர், கர்ண் சர்மா, மனோஜ் பந்தகே, வைஷாக் விஜய்குமார், ஆகாஷ் தீப், முகமது சிராஜ், ரீஸ் டோப்லி, ஹிமான் சர்மா, ராஜன் குமார், மயங்க் தாகர், கேமரூன் கிரீன், அல்ஜாரி ஜோசப் (11.50 கோடி), யாஷ் தயாள் (5 கோடி), டாம் கர்ரன் (1.50 கோடி), லாக்கி பெர்குசன் (2 கோடி), ஸ்வப்னில் சிங் (20 லட்சம்), சவுரவ் சுவா ஹான் (20 லட்சம்).

**ராஜஸ்தான் ராயல்ஸ்**

சஞ்சு சாம்சன், ஜோஸ் பட்லர், ஷிம்ரோன் ஹெட்மியர், யஷஸ்வி ஜெய்ஸ்வால் , துருவ் ஜூரல், ரியான் பராக் , டோனோவன் ஃபெரீரா, குணால் ரத்தோர், ரவிச்சந்திரன் அஸ்வின், குல்தீப் சென், நவ்தீப் சைனி, பிரசித் கிருஷ்ணா, சந்தீப் சர்மா, ட்ரெண்ட் போல்ட், யுஸ்வேந்திர சாஹல், ஆடம் ஜம்பா, அவேஷ் கான், ரோவ்மேன் பவல் (7.40 கோடி), சுபம் துபே (5.80 கோடி), டாம் கோஹ்லர் காட்மோர் (40 லட்சம்), நந்த்ரே பர்கர் (50 லட்சம்), அபித் முஷ்டாக் (20 லட்சம்)

**சன்ரைசர்ஸ் ஹைதரா பாத்**

அப்துல் சமது, ஐடன் மார்க்ரம், ராகுல் திரிபாதி, க்ளென் பிலிப்ஸ், ஹென்றிச் கிளாசென், மயங்க் அகர்வால், அன்மோல்பிரீத் சிங், உபேந்திர சிங் யாதவ், நிதிஷ் குமார் ரெட்டி, அபிஷேக் சர்மா, மார்கோ ஜான்சன், வாஷிங்டன் சுந்தர், சன்வீர் சிங், புவனேஷ்வர் குமார், டி நடராஜன், மயங்க் மார்கண்டே, உம்ரான் மாலிக், ஃபசல்ஹக் ஃபாரூக்கி, ஷாபாஸ் அகமது, டிராவிஸ் ஹெட் (6.80 கோடி), வனிந்து ஹசரங்க (1.5 கோடி), பாட் கம்மின்ஸ் ( 20.5 கோடி), ஜெய்தேவ் உனத்கட் (1.6 கோடி), ஆகாஷ் சிங் (20 லட்சம்), ஜாதவேத் சுப்ரமணியன் (20 லட்சம்).

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 20.12.2023 அன்று வெளியிடப்பட்டது.